எண்: 123 /2026 நாள்: 22.10.2026

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.

செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழிற் நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம்/ தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 11/2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) அடங்கிய பதவிகளில், 9 பதவிகளுக்கான தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டு எண். 3782/2024-ல், 16.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 07.07.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

அதனடிப்படையில், மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு 17.09.2026 முதல் 23.09.2026 வரை நடைப்பெற்ற நிலையில் , நிரப்பப்படாத காலிப்பணியிடங்களுக்கான அடுத்தகட்ட கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Onscreen Certificate Verification) தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள், ஒட்டுமொத்த தரவரிசை எண், இடஒதுக்கீட்டு விதி, காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பதிவெண்கள் கொண்ட பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் 22.10.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்